# ஸலஃபுகள் என்றால் யார் அமர்வு 2

தலைப்பு : ஸலஃபுகள் என்றால் யார் அமர்வு 2

வரிசை : 698

இடம் : விஸ்டம் மையம், கோயம்புத்தூர்

உரை : உமர் ஷரீஃப் அப்துஸ் ஸலாம்

நாள் : 27-02-2022 | 28-07-1443

**بسم الله الرحمن الرحيم**

إنَّ الْحَمْدَ لِلَّهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ، مَنْ يَهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ لَهُ، وَمَنْ يُضْلِلْ فَلَا هَادِيَ لَهُ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ، أَمَّا بَعْدُ فَإِنَّ خَيْرَ الْحَدِيثِ كِتَابُ اللهِ، وَخَيْرُ الْهُدَى هُدَى مُحَمَّدٍ، وَشَرُّ الْأُمُورِ مُحْدَثَاتُهَا، وَكُلُّ بِدْعَةٍ ضَلَالَةٌ

நிச்சயமாக எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே! அவனை நாம் புகழ்கிறோம்; அவனிடம் உதவி தேடுகிறோம். அவன் யாரை நேர்வழி செலுத்தினானோ அவரை வழிகெடுப்பவர் யாரும் இல்லை. அவன் யாரை வழிகெடுத்தானோ அவரை நேர்வழி செலுத்துபவர் யாரும் இல்லை. நிச்சயமாக வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறவே இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை அறவே இல்லை, மேலும் நிச்சயமாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார்கள் என்று சாட்சி கூறுகின்றேன்.

பிறகு, பேச்சுகளில் மிக சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். வழிமுறைகளில் மிக சிறந்தது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறையாகும். காரியங்களில் மிக கெட்டவை மார்க்கத்தில் புதிதாக சேர்க்கப்பட்டவை ஆகும். ஒவ்வொரு அனாச்சாரமும் வழிகேடாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் :

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ

பொருள் : நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வை அவனுக்கு பயப்படவேண்டிய முறைப்படி உண்மையாக பயப்படுங்கள். (முற்றிலும் அவனுக்கு வழிப்பட்டவர்களாக) முஸ்லிம்களாகவே தவிர நீங்கள் இறந்துவிட வேண்டாம். (அல்குர்ஆன் 3 : 102)

يَاأَيُّهَا النَّاسُ اتَّقُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُمْ مِنْ نَفْسٍ وَاحِدَةٍ وَخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيرًا وَنِسَاءً وَاتَّقُوا اللَّهَ الَّذِي تَسَاءَلُونَ بِهِ وَالْأَرْحَامَ إِنَّ اللَّهَ كَانَ عَلَيْكُمْ رَقِيبًا

பொருள் : மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனுக்குப் பயந்து (நடந்து)கொள்ளுங்கள். அவன் உங்கள் அனைவரையும் ஒரே ஓர் ஆன்மாவில் இருந்து உற்பத்தி செய்தான். (ஆரம்பத்தில் அந்த ஒருவரை படைத்து) அவரிலிருந்து அவருடைய மனைவியைப் படைத்தான். பின்பு அவ்விருவரிலிருந்து ஆண்கள், பெண்கள் என பலரை (இப்பூமியில்) பரப்பினான். ஆகவே, (அத்தகைய) அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து (நடந்து)கொள்ளுங்கள். அவனைக்கொண்டே நீங்கள் (உங்களுக்குள் ஒருவருக்கொருவர் வேண்டியவற்றைக்) கேட்டுக்கொள்கிறீர்கள். இன்னும் (அல்லாஹ்வுக்குப் பயந்து) இரத்த உறவினர்களிடமும் (அன்பாக நடந்து கொள்ளுங்கள்). நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கவனித்தவனாகவே இருக்கிறான். (அல்குர்ஆன் 4 : 1)

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا يُصْلِحْ لَكُمْ أَعْمَالَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَمَنْ يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ فَازَ فَوْزًا عَظِيمًا

பொருள் : நம்பிக்கையாளர்களே! நீங்களும் அல்லாஹ்வுக்குப் பயந்து நேர்மையான விஷயங்களைக் கூறுங்கள். அவன் உங்கள் காரியங்களை உங்களுக்கு சீர்படுத்தி வைத்து உங்கள் குற்றங்களையும் உங்களுக்கு மன்னிப்பான். அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவர் கீழ்ப்படிகிறாரோ அவர் நிச்சயமாக மகத்தான வெற்றியடைந்து விட்டார். (அல்குர்ஆன் 33 : 70, 71)

சகோதரர்களே! சகோதரிகளே! சஹாபாக்களை மார்க்கத்தில் வழிகாட்டிகளாக, அவர்களுடைய புரியதலை நாம் ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்களை ஏன் மார்க்கத்தில் வழிகாட்டிகளாக நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். என்பதற்குரிய விளக்கங்களை தொடர்ந்து நாம் பார்த்து வருகின்றோம்.

அதிலே, பல காரணங்களையும் முந்திய அமர்வுகளில் பார்த்தோம் இன்னும், சில காரணங்களை இன்ஷா அல்லாஹ் இந்த அமர்விலே பார்ப்போம். கடைசியாக நான் கூறும் பொழுது, சஹாபாக்கள் மார்க்கத்திலே பிதாத்துகள் செய்யவில்லை.

எந்தவிதமான பிரிவுகளையோ, இந்த சூஃபிகள் உருவாக்கி இருப்பதைப் போல, மார்க்கத்தில் சடங்க சம்பிரதாயங்களையோ, அல்லது பின்னால் வந்த சோகால், மத்ஹப்வாதிகளிலே கியாஸ் என்ற பெயரிலே உருவாக்கிய அந்த தவறான அமல்களைப் போலவோ,

இப்படி எந்த வகையிலும் மார்க்கத்தில் அவர்கள் புதுமையை செய்யவில்லை. மாறாக. பிதாத் செய்தவர்களை, முதன்மையாக. அழுத்தம் திருத்தமாக, கண்டித்தவர்களாக, கண்டிப்பவர்களாக தான் சஹாபாக்கள் இருந்தார்கள்.

கூஃபாவிலே அப்துல்லாஹ் இப்னு மசூத் ரலியல்லாஹு அன்ஹு என்ற ஒரு நபித்தோழர். கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? இங்கே இன்னொரு பிரச்சனை என்னவென்றால். நம்ம மக்கள். ஹதீஸ் கிதாபுகளை கூட முழுசாக படிப்பது கிடையாது.

விரலை ஆட்டுவது சம்பந்தப்பட்ட ஹதீஸ். கையை நெஞ்சில் வைப்பது பற்றிய ஹதீஸ். கையை காதுக்கு நேராக உயர்த்த வேண்டுமா? பூஜத்திற்கு நேராக உயர்த்த வேண்டுமா? அந்த ஹதீஸ். இப்படி

தொழுகையுடைய பாடத்திலே, பிறகு ஒரு சில பாடங்களில் உள்ள ஒரு சில நாலு ஐந்து ஹதீஸ்களுடைய ஒட்டுமொத்த மார்க்க கல்வியும் இன்று மக்களுக்கு முடிந்துவிட்டது.

அதற்கு மேல என்ன என்ன ஹதீஸ்கள் இருக்கு? எங்கே தேடணும்? எங்கே படிக்க வேண்டும் என்பதை சொல்லுங்கள் பார்க்கலாம். புகாரி ஏழு வால்யூம் இருக்கிறதா? தமிழாக்கம் வந்திருக்கின்றதா? இதிலே. இதனுடைய பிற்பகுதி. இதனுடைய பிற்பகுதியிலே கடைசியில் கிதாபுல் மனாகிப் சிறப்புகளைப் பற்றிய பாடம். அதிலே நபிமார்கள் சிறப்பு, பிறகு வரிசையாக. கடைசியில் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உடைய சிறப்பு. பிறகு ஸஹாபாக்களுடைய சிறப்பு, குரைஷிகளுடைய சிறப்பு, முஹாஜிர்களுடைய சிறப்பு, அன்சாரிகள் சிறப்பு, அபூபக்கர் உடைய சிறப்பு, உமருடைய சிறப்பு. உஸ்மான் உடைய சிறப்பு, அலியினுடைய சிறப்பு. ரலியல்லாஹு அன்ஹும் அஜ்மயீன்.

பிறகு அப்படியே தனிப்பட்ட ஒவ்வொரு சஹாபாக்களை பற்றிய சிறப்பு, பிறகு பொதுவாக ஸஹாபாக்களை பற்றிய சிறப்பு. இப்படி என்று இவ்வளவு பெரிய ஒரு அத்தியாயம் இருக்கே, அந்த அத்தியாயத்தை என்றைக்காவது உட்கார்ந்து, மன ஓர் மையுடன் இதுவும் ரசூலுடைய வார்த்தை இருந்து வந்த ஹதீஸ் தானே.

எந்த ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம். தொழுகையை பத்தி சொன்னார்களோ, நோன்பை பற்றி சொன்னார்களோ, மறுமையை பற்றி சொன்னார்களோ, அதே நபி தானே இந்த சிறப்பையும் சொல்லியிருக்கின்றார்கள்.

அப்பொழுது இதே படிப்பது ஒரு இபாதத்தானே? இதை தெரிந்து கொள்வது ஒரு இபாதத்து தானே? இதை ஏற்றுக் கொள்வதும் மார்க்க நம்பிக்கையில் ஒன்று தானே? இதை சிந்தித்து பார்க்க வேண்டாமா?

சொல்லுங்கள். நான் கேட்பது புரிகிறதா? உங்களுக்கு. தொழுகையுடைய பாடத்திலே வருகின்ற சில ஹதீஸ்களை நாம் அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து பேசக்கூடிய நாம். ஹதீஸின் உடைய ஒரு பெரும் பகுதியாக இதை, இன்று மக்கள் எப்படி மறந்தார்கள்?

அப்படி மறந்ததினுடைய விளைவு தான் இந்த பிஜே மாதிரியான ஆட்கள் உங்களுக்கு முன்னாடி வந்து சஹாபாக்களை பற்றி ஈசியா விமர்சனம் பண்ணி, அவர்களுடைய மரியாதையை கெடுத்துவிட்டு போய்விடுகின்றார்கள்.

அதெல்லாம் படித்து, உங்களுடைய மனதிலே அவர்களைப் பற்றிய ஒரு நல்ல எண்ணம். அவர்களை பற்றி ஒரு தவறான செய்தி வந்தால், இந்த நல்ல செய்திகளை கொண்டு, அந்த தவறான செய்திகளுக்கு எப்படி மறுப்பு சொல்வது என்ற விளக்கம் தெரியாமல் இருப்பதினால் தான், ஈசியாக, இன்றைய பாமர வாலிபர்களுடைய உள்ளத்தில் சஹாபாக்களை பற்றி தவறானது சொல்லி வீழ்த்தி விட்டு சென்று விடுகின்றார்கள்.

அப்பொழுது. சஹாபாக்களை பொறுத்த வரைக்கும், அல்லாஹ்வும் அல்லாஹ்வுடைய ரசூலும், அதிகமாக சிறப்புகள் சொல்லப்பட்ட ஒரு சமுதாயமாக அவர்கள் இருந்தார்கள். அதிகமாக சிறப்புகள்

சொல்லப்பட்ட ஒரு சமுதாயமாக இருந்தார்கள். அந்த சிறப்பு என்பது வெறும் அவர்கள் இந்த பிஜே சொல்ற மாதிரி ஹிஜ்ரத்னாலே முந்தியவர்கள், ருஸ்ரதிலே முந்தியவர்கள்.

அதுதான் அவர்களிடம் இருந்தது, என்பது கிடையாது. அதையும் தாண்டி இபதத்தில், தக்வாவில், அது போன்று மார்க்கத்தை புரிந்து நடப்பதில், மார்க்கத்தை புரிந்து நடப்பதில், மார்க்கத்தை புரிந்து நடப்பதில் அவர்கள் சிறந்தவர்களாக இருந்தார்கள்.

இங்கே பாருங்கள். எல்லாவற்றையும் உங்களுக்கு முன்னாடி எப்படி திருச்சி, திருச்சி விளக்கம் சொல்லி இருக்கின்றார்கள் பாருங்கள். இப்பொழுது நாம் இப்படி சொல்லும் பொழுது, திடீரென்று வருவார்கள். சஹாபாக்களுக்கு என்ன விளக்கம் தெரிஞ்சுச்சு. எப்படி? ஈஸியான இந்த ஆயத்திற்கு கூட விளக்கம் தெரியவில்லையா? என்ன ஆயத்து?

أُحِلَّ لَكُمْ لَيْلَةَ الصِّيَامِ الرَّفَثُ إِلَى نِسَائِكُمْ هُنَّ لِبَاسٌ لَكُمْ وَأَنْتُمْ لِبَاسٌ لَهُنَّ عَلِمَ اللَّهُ أَنَّكُمْ كُنْتُمْ تَخْتَانُونَ أَنْفُسَكُمْ فَتَابَ عَلَيْكُمْ وَعَفَا عَنْكُمْ فَالْآنَ بَاشِرُوهُنَّ وَابْتَغُوا مَا كَتَبَ اللَّهُ لَكُمْ وَكُلُوا وَاشْرَبُوا حَتَّى يَتَبَيَّنَ لَكُمُ الْخَيْطُ الْأَبْيَضُ مِنَ الْخَيْطِ الْأَسْوَدِ مِنَ الْفَجْرِ ثُمَّ أَتِمُّوا الصِّيَامَ إِلَى اللَّيْلِ وَلَا تُبَاشِرُوهُنَّ وَأَنْتُمْ عَاكِفُونَ فِي الْمَسَاجِدِ تِلْكَ حُدُودُ اللَّهِ فَلَا تَقْرَبُوهَا كَذَلِكَ يُبَيِّنُ اللَّهُ آيَاتِهِ لِلنَّاسِ لَعَلَّهُمْ يَتَّقُونَ

நோன்புடைய இரவில் நீங்கள் உங்கள் மனைவிகளுடன் உடலுறவு கொள்வது உங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் உங்களுக்கு ஆடை ஆவர். நீங்கள் அவர்களுக்கு ஆடை ஆவீர்கள். நிச்சயமாக நீங்கள் உங்களை ஏமாற்றுகிறீர்கள் என்பதை அல்லாஹ் அறிவான். ஆகவே, உங்கள் தவ்பாவை அவன் அங்கீகரித்தான். இன்னும், உங்களை விட்டும் முற்றிலும் தவறை போக்கி (மன்னித்து) விட்டான். )அல்குர்ஆன்2 : 187)

ஆகவே, இப்போது நீங்கள் அதிகாலையில் கருப்பு நூலிலிருந்து வெள்ளை நூல் உங்களுக்குத் தெளிவாகும் வரை அவர்களுடன் உடலுறவு வைக்கலாம்; அல்லாஹ் உங்களுக்கு விதித்த (குழந்தை பாக்கியத்)தை நீங்கள் தேடலாம்; உண்ணலாம்; பருகலாம். (அதன்) பிறகு, இரவு வரை நோன்பை முழுமையாக்குங்கள். )அல்குர்ஆன்2 : 187)

நீங்கள் மஸ்ஜிதுகளில் (இஃதிகாஃப்) தங்கி இருக்கும்போது அவர்களுடன் (-மனைவிகளுடன்) உடலுறவு வைக்காதீர்கள். இவை அல்லாஹ்வுடைய சட்டங்களாகும். ஆகவே, அவற்றை நெருங்காதீர்கள். அல்லாஹ் மனிதர்களுக்கு - அவர்கள் அல்லாஹ்வை அஞ்சுவதற்காக - தன் வசனங்களை இவ்வாறு தெளிவுபடுத்துகிறான்.) அல்குர்ஆன்2 : 187)

காலையில் வெள்ளை நூல் கருப்பு நூல் தெளிவாகின்ற வரை நீங்கள் சாப்பிடலாம் குடிக்கலாம் என்று அல்லாஹ் சொல்கின்றான். இத பாருங்கள் அவருக்கு விளக்கம் தெரியவில்லை. இரண்டு நூலை தலைக்கு வைத்துவிட்டு படுத்துக்கொண்டார்.

# ஸலஃபுகள் என்றால் யார் அமர்வு 2

இரண்டு நூலை தலைக்கு வைத்து படுத்துக்கொண்டு, கருப்பு நூலையும் வெள்ளை நூலையும் பார்க்கின்றார். தெரிகிறதா இல்லையா என்று. தெரியவில்லை. சாப்பிடுகின்றார். தூங்குகிறார். தெரியவில்லை. கடைசியில் பார்த்தால் விடிந்து விட்டது. இந்த அளவுக்கு தான் அவர்களுடைய விளக்கம். அல்லாஹ் ரஹ்மானே!

இது அவர்கள் சொல்வது எப்படி? இப்போ நாம் இதே சம்பவத்தை உங்களுக்கு சொல்லுகின்றேன். எப்படி பாருங்கள். சேம் சப்பாவம் தான். அதற்கு பின்னாடி எக்ஸ்ட்ரா பிட்டிங் போட்டார்கள் பார்த்தீர்களா? அது தான் வித்தியாசம். சம்பவம் ஒன்று தான். நானும் அதே சம்பவத்தை தான் உங்களுக்கு இப்பொழுது சொல்லப் போகின்றேன்.

அவர்களும் அதே சம்பவத்தை தான் சொன்னார்கள். அவர்கள் எப்படி உங்களை டுவிஸ்ட் செய்தார்கள். உங்களை எப்படி ராங்காக, டியூன் பண்ணாங்க. திருப்புனாங்க. எப்படி? நம்ம இமாம்கள் இந்த ஹதீஸை சொல்லி சஹாபாக்கள் மேல எப்படி நல்ல நம்பிக்கையை வரவழைத்தார்கள் என்று பாருங்கள்.

சம்பவம் அதே தான். அதேபோலத்தான் செய்தார் அந்த ஸஹாபி. அல்லாஹ் அவரை எப்படி திருத்தனா பாருங்கள். விட்டானா அதே தவறு லே. அவர் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இடத்திலே வந்து சொல்கின்றார்.

قُلتُ يا رَسولَ اللَّهِ: ما الخَيْطُ الأبْيَضُ، مِنَ الخَيْطِ الأسْوَدِ أهُما الخَيْطَانِ، قالَ: إنَّكَ لَعَرِيضُ القَفَا، إنْ أبْصَرْتَ الخَيْطَيْنِ، ثُمَّ قالَ: لا بَلْ هو سَوَادُ اللَّيْلِ، وبَيَاضُ النَّهَارِ.

யா ரசூலுல்லாஹ்! அல்லாஹ் இப்படி சொல்லி இருக்கின்றான். நான் இப்படி செய்தேன் என்று சொல்லி. அப்பொழுது. தான் புரிந்து கொண்டதை யாரிடத்திலே சொல்லி சரி பார்க்கின்றார். நபி ஸல்லல்லாஹு அலைஹிஸ்ஸலாம் இடத்திலே சொல்லி. அப்படி செய்து, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இல்லை. அதை சொல்லவில்லை அல்லாஹு தஆலா.

அடுத்த ஆயத்திலே, அதே வசனத்திலே அடுத்த வார்த்தை அல்லாஹ் சொல்லுகின்றான் பாருங்கள். மினல் பஜ்ரி என்று சொல்லி. காலை என்று சொல்லுகின்றான் அல்லவா? அப்பொழுது கருப்பு நூல் என்பதை இருளுக்கும், வெள்ளை நூல் என்பதை வெளிச்சத்திற்கும் அல்லாஹ் ஒப்பிடுகின்றான். அப்படி என்று ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விளக்கம் தருகின்றார்கள்.

அறிவிப்பாளர் : அதி இப்னு ஹாதிம் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : புகாரி, எண் : 4510

அப்பொழுது சஹாபாக்களுடைய மிஸ்டேக் இங்கே சரி செய்யப்பட்டதா இல்லையா? இரண்டாவது. நல்ல கவனியுங்கள். நல்லா புரிந்து கொள்ளுங்கள். இப்படி ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றால், நடந்திருக்கவில்லை என்றால், நம்ம காலத்திலேயும் சில பேர் வந்து கருப்பு நூல் சிகப்பு நூல் என்பது கருப்பு நூல் சிகப்பு நூல் தான் உண்மையிலேயே, அது தெரிகின்ற வரைக்கும் சாப்பிடலாம், என்ற பிடிவாதம் பிடிப்பதற்கு ஒரு வாய்ப்பு இருந்திருக்கும்.

## ஸலஃபுகள் என்றால் யார் அமர்வு 2

அதனாலே. அப்படி ஒரு தவறை நடக்க வைத்து, அப்படி ஒரு தவறை அல்லாஹு தஆலா நடக்க வைத்து, சஹாபாக்கள் வழியாகவே, அந்த தவறு ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அதற்கு உண்டான சரியான விளக்கத்தை கொடுத்து, அங்கே கரெக்ட் செய்தார்கள்.

அந்த விளக்கத்தை படித்ததற்கு பிறகு தான், இப்பொழுது நமக்கு புரிய வருகிறது கருப்பு நூல் வெள்ளை நூல் என்று சொல்லும் பொழுது, எதுன்னு சொல்லி? வெளிச்சத்தையும் இருளையும் அல்லாஹ் சொல்கின்றான் என்று.

அதை படிக்காமல் வெறும் குர்ஆனை மட்டும் படித்து இருந்தோம் என்றால், நாமும் எங்கே தான் போயிருப்போம்? கருப்பு நூல் வெள்ளை நூலுக்கு தான் போயிருப்போம். நீ அந்த ஹதீஸை படித்ததற்க்கு பிறகு குர்ஆனை படித்து புரிந்து கொண்டு நமக்கே தெரிதுன்னா,

ஏன் தெரியாத ஹதீஸ படிச்சிட்டியே முன்னாடியே, அப்படி ஒரு சம்பவம் நடந்தது தெரிஞ்சிகிட்டத்தால தான் உன்னால முடிவு செய்ய முடிந்தது. இல்லையென்றால் எப்படி முடிவு செய்திருப்பாய்? புரிகிறதா உங்களுக்கு. இதாங்க. ஒரே சம்பவம்.

நானும் சொல்கின்றேன். நம்ம உலமாக்களும் சொல்கின்றார்கள். அதே சம்பவத்தை அவரும் சொல்கின்றார். அதை வைத்து சஹாபாக்களை அவர் மட்டம் தட்டி, உங்களை சஹாபாக்களிடமிருந்து பிரிக்க பார்க்கின்றார். அதே சம்பவத்தை நாம உங்களுக்கு சொல்கின்ரோம். சொன்ன விதத்தில் சொல்லும் பொழுது உங்களுக்கு புரிய வரும்.

இப்பொழுது பாருங்கள், இதையும் சொல்லி விடுகின்றேன். சஹாபாக்கள் ஜினா செய்யவில்லையா? ஒரே விஷயம் தான். நாமும் சொல்கின்றோம் zina செய்தார்கள் என்று. அவர்களும் சொல்கிறார்கள் ஜினா செய்தார்கள் என்று. சஹாபாக்கள் திருட விலையா? திருடினார்கள். நாமும் சொல்கின்றோம். அவர்களும் சொல்கின்றார்கள்.

சொல்லக்கூடிய வித்தியாசத்தை பாருங்கள். நாம என்ன சொல்கின்றோம். ஜினா என்ற அந்த குற்றத்திற்கு இஸ்லாமிய மார்க்கத்தில் தண்டனைகளிலேயே கடுமையான தண்டனை. புரிகிறதா? ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உடைய காலத்திலே, நன்றாக புரிந்து கொள்ளுங்கள். இதில் இரண்டு மூன்று பதில்கள் இருக்கிறது. மொத்தமாக சொல்கின்றேன். உள்ளுக்குள் இரண்டு மூன்று பதில்கள் உள்ளன.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுடைய காலத்திலே. சஹாபாக்களிடத்தில் ஜினாவே நடக்கவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். பின்னால் வந்தவர்களிடம் மட்டும் நடக்கிறது. சொல்பவர்கள் ஈசியாக சொல்லிவிடலாம். ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உடைய காலத்தில் உள்ளவர்கள் எல்லாம் ரொம்ப உத்தமர்கள்.

அவர்கள் காலத்தில் இப்படி ஒரு சம்பவம் நடந்திருந்து, அதை ரசூலுல்லாஹ் அமல்படுத்திருந்தார்கள் என்றால் நமக்கு தெரிய வரும். இப்படி பட்ட ஒரு சட்டத்தை அமல்ல கொண்டுவர முடியுமா முடியாதா என்று. யாருங்க? ஒருத்தன் ஜினா செய்ததால் ஒருத்தனை போய் கல்லால் எறிய முடியுமா? எரிந்து கொள்ளவா முடியும்?

ருபுவா தீனார். ருபுவா தீனார். என்றால் ஒரு தினார் வந்து இன்றைக்கு 220 ரூபாய் என்று சொன்னால், அதுல நாலுல ஒன்று எவ்வளவு? அறுபது ரூபாய் என்று வைத்துக் கொள்ளுங்கள். 60 ரூபாயை ஒருத்தன் போய் ஒரு வீட்டில் திருடியதற்காக வேண்டி ஒரு கையை மணிக்கட்டு வரை வெட்டி விட முடியுமா? ரசூலுல்லாஹ் காலத்துல அவ்வாறு நடந்திருந்து, ரசூலுல்லாஹ் வெட்டி இருந்தால் நாமும் சொல்லலாம். அவர் காலத்தில் அப்படி நடக்கவே இல்லையே,

இதையெல்லாம் நடைமுறைப்படுத்தப்பட சட்டமா இது? நமக்கு இந்த காலத்துல சாத்தியமாகுமா? அப்படின்னு ஈஸியா கேள்வி கேட்பவர் கேள்வி கேட்டு விடலாம். புரிகிறதா உங்களுக்கு. அல்லாஹ் சுபஹானஹூதஆலா அந்த குற்றத்திற்கு உரிய தண்டனையை சொல்லி, அந்த குற்றமும் நடக்க விட்டு, அந்த குற்றத்திற்கு உரிய தண்டனையை ரசூலுல்லாஹ்வாலே நிகழ்த்த வைத்து, அந்த குற்றம் செய்த சஹாபி பொறுத்து ஏற்றுக் கொள்ளவும் செய்து, பொறுத்து ஏற்றுக்கொள்ளவும் செய்து,

ஒரு முன்மாதிரி முஸ்லிம் சமூகத்திற்கு அல்லாஹு தஆலா செயல் ரீதியான ஒரு உதாரணத்தை காட்டி இருக்கின்றான். உங்களில் யாரும் குற்றம் செய்தால், அவர் அதற்குரிய தண்டனையை மனமுவந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்.

جَاءَ مَاعِزُ بنُ مَالِكٍ إلى النبيِّ صَلَّى اللَّهُ عليه وسلَّمَ، فَقالَ: يا رَسولَ اللهِ، طَهِّرْنِي، فَقالَ: وَيْحَكَ، ارْجِعْ فَاسْتَغْفِرِ اللَّهَ وَتُبْ إلَيْهِ، قالَ: فَرَجَعَ غيرَ بَعِيدٍ، ثُمَّ جَاءَ، فَقالَ: يا رَسولَ اللهِ، طَهِّرْنِي، فَقالَ رَسولُ اللهِ صَلَّى اللَّهُ عليه وسلَّمَ: وَيْحَكَ، ارْجِعْ فَاسْتَغْفِرِ اللَّهَ وَتُبْ إلَيْهِ، قالَ: فَرَجَعَ غيرَ بَعِيدٍ، ثُمَّ جَاءَ، فَقالَ: يا رَسولَ اللهِ، طَهِّرْنِي، فَقالَ النبيُّ صَلَّى اللَّهُ عليه وسلَّمَ: مِثْلَ ذلكَ حتَّى إذَا كَانَتِ الرَّابِعَةُ

எப்படி சஹாபாக்கல்ல ஜினா செய்த ஒரு சஹாபி ரசூலுல்லாஹ்விடத்திலே வந்து, செக்யூரிடியா பிடித்துக் கொண்டு வந்தார்கள் அவரை? அவரே மனமுவந்து வந்து சொன்னார்கள் என்னை சுத்தப்படுத்துங்கள் அல்லாஹ்வின் தூதரே! என்று. தண்டனையை நிறைவேற்றுங்கள் என்ற சொல்லும் பொழுது, அவர் தப்பித்து ஓடவா பார்த்தாரு? மனமு வந்து போகின்றார். அதேபோலத்தான் திருடிய sahabi யும் புரிகிறதா இல்லையா?

அறிவிப்பாளர் : புரைதா இப்னு அல்ஹஸீப் அல்அஸ்லமீ ரழியல்லாஹு அன்ஹு, நூல் : முஸ்லிம், எண் : 1695 குறிப்பு 1

அப்பொழுது நாம் சொல்லும் பொழுது, உங்களுக்கு வரக்கூடிய அந்த தக்வா. அந்த பயம். மார்க்கத்தின் மேலே உள்ள பற்று. மார்க்கம் என்பது நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்களை உடையது. எல்லாவற்றிற்கும், நமக்கு சஹாபாக்களுடைய காலத்திலே முன்னுதாரணம் இருக்கிறது.

என்று உங்களுக்கு புரிய வருகிறது. அதே நேரத்தில். அவர்கள் சொல்லும் பொழுது, என்னய்யா சஹாபாக்கள் ஜினா செய்யவில்லையா அவர்கள். நம்மில் உள்ள சாதாரணவர்கள் கூட அப்படி செய்வதில்லை. அஸ்தஃபிருல்லாஹல் அளீம். அப்படி என்றால் அந்த கூட்டத்தில் இருப்பவர்கள் எல்லாருமே அப்படித்தானா? ஒருத்தர் இரண்டு பேர். எப்படி? எங்கயோ நடந்த தவறு.

ஏனென்றால் எல்லாமே பதியப்பட்டு விட்டது இல்லையா? ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உடைய மொத்தம் 23 வருடத்தில் ஜினாவுடைய கேஸ் எவ்வளவு சொல்லுங்கள். ஒரு லட்சத்து 24 ஆயிரம் அல்லது 64 ஆயிரம் சஹாபாக்களை விட்டுச் சென்றார்கள் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.

கேஸை கணக்கு பண்ணுங்க. 23 வருஷத்துடைய கேசை. திருட்டு கேசை கணக்கு பண்ணுங்கள். எந்த வகையில் பார்த்தாலும், அவர்கள் உயர்ந்தவர்களே. குற்றம் செய்தார்கள். திருந்தினார்கள். திருந்தப்பட்டார்கள். சுத்தப்படுத்தப்பட்டார்கள்.

புரிகிறதா? நாம் என்ன சொல்கின்றோம். அந்த குற்றத்திலே அவர்களைப் பார்க்காதீர்கள். அவர்கள் திருந்தியதை அவர்களை பாருங்கள். இரண்டுக்கும் இடையிலே வித்தியாசம் இருக்கிறது. தப்பு செய்துவிட்டு ஒருவர் திருந்துவதை பார்க்கணுமா. நீங்க முன்னாடி தப்பு செஞ்சீங்க இல்ல. இப்ப. ஒரு தகப்பனாரு. அவர் முன்னாடி சிகரெட் குடித்துக்கொண்டிருந்தார். இப்பொழுது குடிப்பதில்லை. திருந்தி விட்டார். விட்டுவிட்டார். இப்பொழுது மகனிடம் கூறுகின்றார்.

மகன் காலேஜுக்கு போகின்றார். வேலைக்கு போகின்ற இடத்திலே கெட்ட பழக்கம் வந்துவிட்டது. மகனே! சிகரெட் குடிக்காதே என்று கூறினார். இப்பொழுது மகன் சொல்கின்றார் தகப்பனாரிடம். நீயும் கொஞ்சம் நாள் குடித்துக்கொண்டு தானே இருந்தாய்? என்று கேட்கின்றார்.

நீங்களும் கொஞ்சம் நாள் குடித்துக்கொண்டு தான் இருந்தீர்கள்? உங்களுக்கு புத்தி வந்தது போல் எனக்கும் புத்தி வரும் என்று கூறினார் மகன். நான் விட்டு விடுகின்றேன் என்று கூறுவது இது சரியான வாதமா? சொல்லுங்கள். இது அழகான வாதமா? நீங்கள் செஞ்சீங்க இல்ல முன்னாடி தப்பை, அதனால் தான் நானும் இதை செய்கின்றேன் என்றால் இது அழகான வாதமா?

திருந்தியதற்கு பிறகு உள்ள நிலைமையை பார்க்க வேண்டுமா? முந்தைய நிலைமையை பார்க்க வேண்டுமா? அல்லாஹ் என்ன சொல்லுகின்றான்? அவர்கள் திருந்தியதற்கு பிறகு உள்ள நிலையை பாருங்கள். தவ்பா விற்கு பிறகு உள்ள நிலையை பாருங்கள்.

நீ என்ன செய்கின்றாய்? அவர்கள் மன்னிக்கப்படுவதற்கு பின்னாடி குற்றம் செய்த நிலையை வைத்து வைத்து அவர்களைப் பேசுகின்றாய். இதுதான் அவர்களுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம். நாம் அவர்களை குற்றமே செய்யாத மலக்கு என்று சொல்லவில்லை. குற்றம் செய்தவர்கள். ஆனால் மன்னிக்கப்பட்டவர்கள்.புரிகிறதா? விஷயத்திற்கு வாருங்கள்.

குர்ஆனுடைய விளக்கம் இருக்கு பாருங்கள். இந்த குர்ஆன் அரபு மொழியிலே இறக்கப்பட்டதுனாலையோ, ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் குர்ஆனும் ஹதீஸும் எந்த மொழிகள்? அரபி மொழி. நீங்களும் நானும் பல வருடம் தொடர்ச்சியாக அரபி மொழியை படித்தால் தான் அரபி மொழியில கொஞ்சமாவது திறமை வரும். சரியா? அப்படி அரபி மொழியில் அந்த திறமை வந்தால்தான் குர்ஆனை புரிந்து கொள்ள முடியும்.

அரபி மக்களுக்கு. அரபி மொழியில் அதை புரிந்து கொள்வதற்காக அரபு பாஷையிலே நாம் குர்ஆனை இறக்கினோம் என்கின்றான். அப்பொழுது குர்ஆனை புரிந்து கொள்வதற்கு அடிப்படை அறிவு என்னவென்றால், அரபி மொழி சரியாக, அது வட்டாத வழக்கோடு தெரிந்திருக்க வேண்டும்.

ஒவ்வொரு வாக்கியமும், இந்த வாக்கியம் இப்படி சொல்லப்பட்டால், எப்படி புரிந்து கொள்ளப்பட வேண்டும் என்பதோடு சேர்த்து புரிந்து இருக்க வேண்டும். இப்பொழுது உங்களிடம் நான் ஒரு உதாரணம் சொல்கின்றேன் பாருங்கள்.

இந்த அரபி புரியவில்லை என்றால் என்ன குழப்பம் ஏற்படும் என்று. இடையிலே மன்னிக்க வேண்டும் அந்த பகரா உடைய தலாக் உடைய வசனம் சொல்லும்பொழுது 280 என்று சொன்னேன் அல்லவா? 238 என்று சொன்னார்கள் ஷேக். ஏனென்றால் இந்த மாதிரி வார்த்தையில் அவசரத்தில் ஏதாவது நான் சொல்கின்றோம் அல்லவா? இதை மிகவும் பெரிதாக எழுத்து கொள்வார்கள்.

இவ்வளவு சொன்னோம் அல்லவா ஹைலைட்டாக. பாருங்கள். இவருக்கு பகராவில் ஆயத்தே தெரியவில்லை என்று. ஒரு குரானை மனனம் செய்த ஹாபிஸ் அவர்களால் உருவாக்க முடிந்ததா பாருங்கள். அவர்களிடம் மட்டும் வாடகைக்கு ஹாஃபிளாக கூட்டிக் கொண்டு வரவில்லை என்றால் தொழ வைப்பதற்கு ஆள் இருக்க மாட்டார்கள். வாடகைக்கு ஹாஃபிளை கூட்டிக்கொண்டு வரவில்லை என்றால், தொழ வைப்பதற்கு ஆள் இருக்க மாட்டார்கள். விஷயத்திற்கு வரலாம்.

நாம் என்ன கேட்கின்றோம்? இவ்வளவு மார்க்கப்பற்று பேசுகின்றீர்கள். அல்ஹம்துலில்லா! ரொம்ப சந்தோஷம். உங்களுக்கு இருக்கின்ற அந்த மார்க்க பற்று உண்மை என்று சொன்னால், யா! அல்லாஹ்! அவர்களுக்கு இருக்கின்ற மார்க்கப்பற்று எங்களுக்கு கொடு என்ற துஆ செய்யலாம்.

எங்கேயாவது குர்ஆனை மனப்பாடம் செய்வதற்கு, ஹதீஸை மனப்பாடம் செய்வதற்கு, மதரஸா இருக்கிறதா காட்டுங்கள். ஹதீஸ்களை மனப்பாடம் செய்வதற்கு என்று மதரஸா வைத்து நடத்துங்கள். சந்தோஷப்படுவோம் நீங்களும் கண்டிப்பாக சந்தோஷப்படுவீர்கள் நாங்களும் சந்தோஷப்படுவோம். முடிந்தால் எங்கள் பிள்ளைகளையும் சேர்த்து விடுவோம் ஹதீஸை மனப்பாடம் பண்ணி கொடுக்கின்றார்கள் என்று. அதற்கெல்லாம் மதரஸா இருக்காது.

(மதரசா ஆறு மாத கோர்ஸிலே ஆலிம் ஆகிவிடலாம். மார்க்கத்தை புரட்டி போட்டு விடலாம்.) (2) அப்படியே பிச்சி மார்க்கத்தை அப்படியே பிரித்து விடலாம். என்று சொல்லிவிட்டு முதல் வகுப்பு காலையில் எடுத்த உடனே. இதெல்லாம் நடந்ததை சொல்கின்றேன். நடந்து கொண்டிருப்பதை சொல்கின்றான். நேரடியாக பார்த்ததை சொல்கின்றேன். கேட்டதை சொல்கின்றேன். அங்கிருந்து வந்தவர்களிடம் கேட்டுச் சொல்கின்றேன்.

எப்படி? ஆறு மாதத்திலே ஆலிம் ஆகி. 23 வருடம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடத்திலே மார்க்கத்தை படித்தவர்களையே விளங்காதவர்கள் என்று சொல்லிவிட்டார்கள். ஆறு மாதம் உங்களிடம் படித்து விட்டாலே, என்ற ஹதீஸுக்கு விளக்கம் தெரியாது. அந்த ஹதீஸ் முழுசாக மனப்பாடமும் தெரியாது. உங்களிடம் படித்து விட்டால், என்ன செய்து விடலாமா ஆறு மாசத்துலே? அப்படியே மார்க்கத்தை புரட்டி போட்டு விடலாம். அதுதான் புரட்டி போட்டு விட்டீர்களே.

முதல் வகுப்பு என்னவென்றால், அண்ணன் பி.ஜே எடுக்குறாரு. குர்ஆனுக்கு முரண்படும் சஹிஹான ஹதீஸ்கள். ஆறு மாத கோர்ஸிலே முதல் வகுப்பு. ஒன்றுமே தெரியாது. அவன் பிளஸ் டூ படித்து இருப்பான். 10th படித்து இருப்பான். BA படித்திருப்பான். மார்க்க கல்வி என்று சொல்லி, அண்ணன் சொன்னாரே, பெரிய தியாகி ஆச்சே என்று ஓடி வந்தான். அவனுக்கு எடுக்கின்ற முதல் கிளாஸ் என்ன?

குர்ஆனுக்கு முரண்படும்  சஹி ஹதீஸ்கள். புகாரியில் இருந்து முஸ்லிம்லிருந்து. இது தான் முதல் கிளாஸ். உருப்படுமா? சொல்லுங்கள்.

முதலில் அவனுக்கு ஹதீஸ் என்ன என்று சொல்ல வேண்டும். உஸூலுல் ஹதீஸை நடத்த வேண்டும். என்ன சொல்கின்றீர்கள்? என்ன  உருவாகும் பாருங்கள். சூரா அல் புர்கான். 25வது அத்தியாயம். அதனுடைய கடைசி பகுதியிலே ரப்புல் ஆலமீன் ஒரு வசனம் சொல்கின்றான்.

وَالَّذِينَ إِذَا ذُكِّرُوا بِآيَاتِ رَبِّهِمْ لَمْ يَخِرُّوا عَلَيْهَا صُمًّا وَعُمْيَانًا

என்ன வசனம்? இங்கே பாருங்கள். 73 வது வசனம். இப்பொழுது அர்த்தம் சொல்லும் பொழுது உங்களுக்கு தெரியும். நிறைய தடவை நீங்கள் கேள்விப்பட்ட வசனம் என்று.

அவர்கள் எத்தகையோர் என்றால், அல்லாஹ் உடைய தங்களுடைய ரப்புடைய  வசனங்களைக் கொண்டு அவர்களுக்கு உபதேசிக்கப்பட்டால், அவர்கள் செவிடர்களாக, குருடர்களாக, விழ மாட்டார்கள். அல்லாஹ்வுடைய வசனங்களைக் கொண்டு, அவர்களுக்கு உபதேசம் செய்யப்பட்டால், அந்த வசனங்களுக்கு முன்பாக அவர்கள் செவிடர்களாக, குருடர்களாக, விழ மாட்டார்கள். சரியா? 25 லே 73 வது வசனம்.

இந்த வசனத்தை இப்பொழுது உங்களிடம் நான் காமனாக சொல்கின்றேன். நீங்கள் பொதுவாக. கொஞ்சம் அல்லாஹ்வுக்கு பயந்தவர்களாக இருந்தால், சரி ஏதோ அல்லாஹ் சொல்லுகின்றான். குர்ஆன் வசனம் ஓதப்பட்டால், குருடனாகவோ செவிடனாகவோ இருக்க கூடாது என்ற நின்று விடுவோம். சரியா? இப்போ இதற்கு  குர்ஆன் இறக்கப்பட்ட காலத்திலிருந்து.

எப்படி? குர்ஆன் இறக்கப்பட்ட காலத்திலிருந்து, சஹாபாக்கள், தாபீஈ ன்கள், தபஅ தாபீஈன்கள், பின்னால் வந்த குர்ஆன் கலை அறிஞர்கள். அதற்குப் பின்னால் வந்த குர்ஆன் கலை அறிஞர்கள் என்று, வாழையடி வாழையாக குர்ஆனுக்கு தர்ஜமா செய்த தப்ஸீர் செய்த அறிஞர்கள் ஒரு அர்த்தத்தை சொல்கின்றார்கள்.

14வது நூற்றாண்டு உடைய மூதறிஞர் மிகச்சிறந்த மார்க்க அறிஞர் ஒரு அர்த்தத்தை சொல்கின்றார்கள்.  இப்பொழுது வாருங்கள். முதலில் இவர் சொல்கின்ற அர்த்தத்தை பார்ப்போம்.  இவர் என்ன சொல்கின்றார்? இதை பாருங்க. குர்ஆனே சொல்லுது. குர்ஆனே சொன்னா கூட அதை உடனே கண் முடித்தனமாக ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று.

நம்ம அறிவிலே சிந்தித்து தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதுதான் அல்லாஹ் சொல்லுகின்றான் பாருங்கள். குர்ஆன் வசனத்தைக் கொண்டு உபதேசம் செய்யப்பட்டால், குருடனாக செவிடனாக இருக்க மாட்டார்கள். என்ன அர்த்தம்? கண்மூடித்தனமாக நம்ப கூடாது என்பதை சொல்லுது. எப்படி? அப்பொழுது ஹதீஸ் எப்படி?

குர்ஆனையே கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றால், அப்போது ஹதீஸ் எப்படி? ஹதீஸை  இருக்கிறது இருக்கிற மாதிரி ஏற்றுக்கொள்ள முடியுமா?  அறிவிலே சிந்திக்க வேண்டாமா

அந்த ஹதீஸை. ஆம்! கரெக்டு தான். ஆமாம். அப்பொழுது நீங்க இப்படி ஆயத்திருக்கிறது இதற்கு இதுதானே அர்த்தம் என்று சொல்லி எங்கேயாவது போய் க்ராஸ் செக் பண்ணுகின்றோமா?

முதலில் உங்களை எப்படி சொல்லி வளர்த்தார்கள். கிராஸ் செக் பண்ணுங்க. கிராஸ் செக் பண்ணுங்க என்று சொல்லி வளர்த்தார்கள் அல்லவா? மௌலூது வாதிகள் சொல்லும் பொழுதும், மத்ஹப் வாதிகள் சொல்லும் பொழுதும், பிதாத்வாதிகள் சொல்லும் பொழுதும், ஆதாரம் கேளுங்கள், ஆதாரம் கேட்டா புக்கை கேளுங்கள், புக்கை கேட்டால், எடுத்து பாருங்க, படிக்க என்று சொன்னார்கள் அல்லவா?

ஆனால், இவர்களுக்கு மட்டும் அப்படி வளர்த்தார்களா? தங்களுக்கு மட்டும் அப்படியே உங்களை லாடம் கட்டினவர்களாக, லாடம் அதற்கு என்ன சொல்லுவது? கடிவாளம் கட்டினவர்களாக ஆக்கிவிட்டார்கள். முடிந்துவிட்டது கதை. ஆமாம். கரெக்டா இருக்கிறது. குர்ஆனில் இருந்தா கூட நம்ப கண் மூடி தனமாக நம்ப கூடாதுங்க. சிந்தித்துதாங்க நாங்க நம்பனும் என்று இருக்கிறது.

அப்பொழுது எப்படி ஹதீஸ் என்பதை தப்பாக எடுத்துக் கொள்ள முடியும்? எதுவாக இருந்தாலும், அறிவால சிந்திச்சு அறிவு சரி கண்ட பிறகு தான் எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் சொல்வதற்கு ஆதாரம் இது. இப்பொழுது பாருங்கள்.

அரபி மொழி தெரியாததினால் ஏற்படக்கூடிய பின் விளைவுகளில் மிக ஆபத்தான பின்விளைவுக்கு இது ஒரு பெரிய உதாரணம். உங்களிடம் ஒருவர் சொல்கின்றார். ரோட்டில் போறீங்க. பள்ளம் இருக்கு தடுக்கி விழுந்து விடுகின்றீர்கள். ஏம்பா! உனக்கு கண்ணில்லையா என்று கேட்கின்றார்? குருடன் மாறி நடந்து போறியே என்று கேட்கின்றார்?

என்ன அர்த்தம்? பார்த்து போப்பா! குருடன் மாதிரி இருக்காதே. ஏம்பா நான் இவ்வளவு நேரமா சொல்லிக்கிட்டு இருக்கேன் செவிடன் மாதிரி கம்முனு உட்காந்து இருக்கே. என்ன அர்த்தம். கேளுடா.கேட்டதை புரிஞ்சிக்கொள். இவ்வளவு நேரம் சொல்லியும் அப்படியே அலட்சியமாக இருக்கி! திரும்பவும் அதையே சொல்ரே.

அப்படி என்றால் என்ன அர்த்தம்? செவிடனா நீ. நான் கேட்டது நீ காது கொடுத்து வாங்கவில்லையா? காது கொடுத்து கேட்டதை நீ புரியலையா? இது உங்கள் வழக்கத்தில் இருக்கிறதா இல்லையா? புரிகிறதா அல்லாஹ் இங்கே யாரை சொல்லுகின்றான்? குறைஷிக் காபிர்களை சொல்கின்றான். இவ்வளவு குரான் வசனம் உங்களுக்கு சொல்லப்படுகிறது.

குர் ஆன் வசனம் உங்களுக்கு சொல்லப்படுகிறது. அதற்கு முன்னாடி செவிடர்கள் போல குருடர்கள் போல, செவிடனுக்கு முன்னாடி குருடனுக்கு முன்னாடி ஏதாவது சொல்லப் பட்டால் அவனுக்கு ஏதாவது பிரயோஜனம் இருக்குமா? இருக்காது. ஆனால் இந்த சஹாபாக்கள் எப்படி என்று சொன்னால், குர்ஆன் வசனங்கள் இவர்களுக்கு முன்னால் சொல்லப்பட்டால்,

அந்த குறைஷிகள் மாதிரி செவிடர்கள் போல குருடர்களைப் போல இருக்க மாட்டார்கள். அப்படியென்றால் என்ன அர்த்தம்? உடனே அதை உள்வாங்கிக் கொண்டு, படிப்பினை பெற்று, அருள் பெறுவார்கள் என்று அர்த்தம்.

புரிகிறதா? இரண்டுக்கும் உள்ள அர்த்தம். ஒரே ஆயத்து. அர்த்தம் வைத்த விதம் ஒரே விதம்தான். குர்ஆன் வசனங்களை கொண்டு உபதேசிக்கப்பட்டால் செவிடர்களாக குருடர்களாக விழ மாட்டார்கள் என்று சொல்லி, அதற்குப் பிறகு ஒரு interpretation கொடுக்கின்றார் பாருங்கள்.

ஒரு சுயம் விளக்கம் தருகின்றார்கள் பாருங்கள். எதனால வந்த விளக்கம் அரபி மொழி தெரியாததினால். அல்லது எல்லாம் தெரிந்து அந்த தப்ஸீரையும் படித்ததற்கு பிறகும் கூட இவர் கொடுக்கின்றார் என்று சொன்னால், அப்படி கண்டிப்பாக உள்ளத்தில் ஏதோ ஒரு நோக்கத்தை மறைத்து வைத்துக்கொண்டு தான் செய்கின்றார்.

இல்லையா? இப்பொழுது. அவருக்கு என்ன தப்ஸீர் படிக்க தெரியாதா? சொல்லுங்கள். அரபி படிக்க தெரியாதா அவருக்கு. குர்ஆனுடைய தப்ஸீர் லே, ஹதீஸ்லே எப்படி புகாரியோ, அந்த மாதிரி குர்ஆனுடைய தப்ஸீர்லே மூல தப்ஸீர் தபரி. அப்படி என்று அவருக்கு தெரியாதா? அந்த தபரியிலே இப்படி விளக்கம் சொல்லி இருக்கின்றார்கள். அதற்குப் பிறகு வந்த, காலம் தொட்டு வந்த எல்லா முஃபசிர்களும் இதற்கு இப்படித்தான் அர்த்தம் செய்து இருக்கின்றார்கள் என்ற படித்திருக்க மாட்டார்களா?

கண்டிப்பாக படித்திருப்பார். எப்படி? தவறான முறையிலே திருப்பி விடுகின்றார்கள் பாருங்கள். இப்படித்தான் எல்ல மே நடக்கிறது. குர்ஆன் வசனங்கள் ஓதப்பட்டால் அதற்கு முன்னால் குருடர்களாக, செவிடர்களாக அவர்கள் விழ மாட்டார்கள் என்றால் எப்படி ஒரு செவிடனுக்கு முன்னாடி ஓதப்பட்டால் அவனுக்கு ஒன்றும் பிரயோஜனம் கிடைக்குமா? கிடைக்காது.

ஒரு குருடனுக்கு முன்னாடி அத்தாட்சியில் காண்பிக்கப்பட்டால் அவன் அதை கொண்டு படிப்பினை பெற முடியுமா? முடியாது. அப்படி இவர்கள் இருக்க மாட்டார்கள். உடனே அதை ஏற்றுக் கொள்வார்கள். என்று சஹாபாக்களுடைய ஈமானை அல்லாஹுதஆலா இங்கே புகழ்கின்றான்.

எதை அல்லாஹ் சொல்லவில்லை? அவர்களுடைய அறிவை அல்லாஹ் சொல்லவில்லை. சஹாபாக்களுடைய கட்டுப்படக்கூடிய தன்மையை அல்லாஹ் இங்கே புகழ்கின்றான். எதை சொல்லவில்லை? அவர்கள் எது சொன்னாலும் அறிவாள யோசித்துப் பார்ப்பார்கள் என்று சொல்லவில்லை. அப்படி பார்த்து இருந்தால், குரைஷிகள் மிஹ்ராஜை மறுத்த மாதிரி, சஹாபாக்களும் மிஹ்ராஜை மறுத்துப் போயிருப்பார்கள்.

அப்படி அவர்கள் யோசித்து இருந்தால் முனாஃபிக்குகளும், யூதர்களும் கிப்லா மாற்றப்பட்டபோது, நபியை கிண்டல் பண்ண மாதிரி அவர்களும் மாற்றி கிண்டல் பண்ணி போய் இருப்பார்கள். இல்லையா?

سَيَقُولُ السُّفَهَاءُ مِنَ النَّاسِ مَا وَلَّاهُمْ عَنْ قِبْلَتِهِمُ الَّتِي كَانُوا عَلَيْهَا قُلْ لِلَّهِ الْمَشْرِقُ وَالْمَغْرِبُ يَهْدِي مَنْ يَشَاءُ إِلَى صِرَاطٍ مُسْتَقِيمٍ

“அவர்கள் எந்த கிப்லாவை நோக்கி (தொழுபவர்களாக) இருந்தார்களோ அவர்களின் அந்த கிப்லாவை விட்டு அவர்களைத் திருப்பியது எது?’’ என (முஸ்லிம்களைப் பற்றி) மக்களில் உள்ள அறிவீனர்கள் கூறுவார்கள். (அதற்கு நபியே! நீர்) கூறுவீராக: “கிழக்கும் மேற்கும் அல்லாஹ்விற்குரியனவே! அவன் நாடுகிறவர்களை நேரான பாதைக்கு நேர்வழி காட்டுகிறான்.’’2 அல்குர்ஆன்) : 142)

அப்படி இல்லாமல் நபியை எல்லா நிலையிலும் பின்பற்றியவர்கள் யாரு? சஹாபாக்கள். கிப்லா மாற்றப்பட்ட பொழுது யூதர்களும் முனாஃபிக்குகளும் என்ன சொன்னார்கள்? என்னய்யா இது? நேற்று வரைக்கும் ஒரு கிப்லாவை பார்த்து தொழுதாரு. இப்பொழுது வேற கிப்லா பார்த்து தொழுவுறாரு. இப்படியே மாறிக்கொண்டே இருப்பாரு போல. வேணா இந்த மார்க்கம் என்று சொல்லி, விலகி சென்றார்கள்.

அல்லாஹ் சொல்லுகின்றான். இப்படி விலகக்கூடியவர்கள் யார்? நபியே உங்களை பின்பற்றக் கூடியவர் யார் என்பதை நாம் சோதித்து அறிவதற்காகவே கிப்லாவை மாற்றினோம் என்று அல்லாஹ் சொல்லுகின்றான்.

كَذَٰلِكَ جَعَلْنَاكُمْ أُمَّةً وَسَطًا لِتَكُونُوا شُهَدَاءَ عَلَى النَّاسِ وَيَكُونَ الرَّسُولُ عَلَيْكُمْ شَهِيدًا وَمَا جَعَلْنَا الْقِبْلَةَ الَّتِي كُنْتَ عَلَيْهَا إِلَّا لِنَعْلَمَ مَنْ يَتَّبِعُ الرَّسُولَ مِمَّنْ يَنْقَلِبُ عَلَىٰ عَقِبَيْهِ وَإِنْ كَانَتْ لَكَبِيرَةً إِلَّا عَلَى الَّذِينَ هَدَى اللَّهُ وَمَا كَانَ اللَّهُ لِيُضِيعَ إِيمَانَكُمْ إِنَّ اللَّهَ بِالنَّاسِ لَرَءُوفٌ رَحِيمٌ

இன்னும், (நம்பிக்கையாளர்களேஅவ்வாறுதான் (!, நீங்கள் மக்களுக்கு சாட்சியாளர்களாக இருப்பதற்காகவும், உங்களுக்கு தூதர் சாட்சியாளராக இருப்பதற்காகவும் சிறந்த), நீதமான ( .நடுநிலைச் சமுதாயமாக உங்களை ஆக்கினோம்தமது குதிங்கால்கள் மீது திரும்பிவிடுவோரிலிருந்து தூதரைப் பின்பற்றுபவர் யார் என்பதை நாம் அறிவதற்காகவே தவிர நீர் (தொழுகையில் முன்னோக்குபவராக) இருந்த (பைத்துல் முகத்தஸ் ஆகிய முதல்) கிப்லாவை (விட்டு உம்மை திருப்பியதை) நாம் ஆக்கவில்லை.

அல்லாஹ் எவர்களை நேர்வழி நடத்தினானோ அவர்கள் மீதே தவிர (மற்றவர்களுக்கு) நிச்சயமாக அது பெரிதாகவே (-பாரமாகவே) இருந்தது. உங்கள் நம்பிக்கையை (-முன்னர் நீங்கள் தொழுத தொழுகைகளை) அல்லாஹ் வீணாக்குபவனாக இல்லை. நிச்சயமாக அல்லாஹ் மக்கள் மீது மிக இரக்கமுடையவன், மகா கருணையாளன்.2 அல்குர்ஆன்) : 143)

இங்கே அல்லாஹ் குர்ஆன் என்று சொல்லவில்லை வஹி என்று சொல்லவில்லை. கிபிலா மாற்றப்பட்ட பொழுது, ரஸூலை பின்பற்றக் கூடியவர் யார்? ரசூலை பின்பற்றாமல் தனது குதிகாலிலிருந்து விளக்கிச் செல்லக் கூடியவர் யார் என்று பிரித்து விடுவதற்காக நான் கிப்லாவை மாற்றினோம் என்று அல்லாஹ் சொல்லுகின்றான். கிப்லா மாற்றப்பட்ட வசனம் இறங்குவதற்கு முன்னால் யாருடைய செயலை வைத்து தெரிந்து கொண்டோம்.

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உடைய செயலை வைத்து தான் தெரிந்து கொண்டோம். அதற்குப் பிறகு வசனம் இறங்குகிறது. நாம் மாற்றி விட்டோம் என்று. ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உடைய wahiயிலேயே அல்லாஹ் மாற்றி விட்டான். அதற்குப் பிறகு ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஓதி காண்பிக்கின்றார்கள். சஹாபாக்கள் பேச்சைக் கேட்டு உடனே மாற்றிக் கொண்டார்கள்.

நபியுடைய செயலைப் பார்த்து மாற்றிக் கொண்டார்கள். விளக்கம் கேட்கவில்லை. புரிகிறதா உங்களுக்கு? அப்பொழுது, itibavur Rasool என்பது சஹாபாக்களிடமிருந்த தனி அடையாளம். Itibavur Rasool என்றால் என்ன? எல்லா விஷயத்திலுமே, நபியை மட்டும் எக்ஸாம்பிள் ஆக்கி, அவரை உதாரணமாக்கி, அவரை பின்பற்றுவது.

ஆகவே, தான் நம்ப சொல்லுகின்றோம். சஹாபாக்களை நாம் பின்பற்றுவது தான் நமக்கு safety. அப்பொழுது சஹாபாக்கள் என்ற சொல்லும் பொழுது திரும்பத், திரும்ப இந்த விளக்கத்தை சேர்த்து விளங்கி கொண்டே போங்க. ஒரு தனிப்பட்ட sahabiயை நாம் சொல்லவில்லை. யாரை சொல்கின்றோம். அந்த ஒட்டுமொத்த எல்லா சஹாபாக்களையும் சொல்லுகின்றோம்.

அவர்களில் யாராவது ஒருவர் செய்த விஷயத்தை மற்ற சஹாபாக்கள் மறுத்திருப்பார்களே ஆனால், அப்படியும் நடந்திருக்கிறது. அப்பொழுது. அந்த சஹாபியினுடைய மறுக்கப்பட்ட பேச்சை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம். புரிகிறதா? அது தவறு என்று சுட்டிக் காட்டினார்கள் பாருங்கள்.அந்த சஹாபாக்கள் உடைய வழியைத் தான் நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். இதை புரிந்து கொள்ளுங்கள்.

ஏனென்றால் உங்களை திரும்பத் திரும்ப வந்து அவர்கள் மடக்குறதுல எதை வைத்து மடக்குவார்கள்? அப்பொழுது sahabi செய்தார்களே, நீங்களும் செய்வீர்களா? அதுதான் தப்பு என்று எல்லாரும் சொல்லி, அவர்களை திருத்தி விட்டார்களே அப்பா! அதை கண்டித்து விட்டார்களே, அதை உணர்ந்து விட்டார்களே, திரும்ப அதுல போய் நம்மை பின்பற்ற சொல்றீங்க?

இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு. அவர் கடைசி வரைக்கும், muttah கூடும் என்று சொன்னாரு தெரியுமா உங்களுக்கு. அப்பொழுது அதை ஏற்றுக் கொள்வீர்களா? என்பார்கள். Muttah என்று சொன்னால் டெம்ப்ரவரி நிக்கா. Taffardat. ஒரு சில தவறுகள், அவர்கள் குர்ஆன் ஆயத்திலிருந்து தவறாக புரிந்து கொண்டு, இருந்த அந்த நிலைப்பாடு.

அது தப்பு என்று எல்லா சஹாபாக்களும் சொன்னதற்குப் பிறகு அந்த சஹாபாக்கள் உடைய வழியில் தான் நாம் ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, தவறு என்ற சுட்டிக்காட்டப்பட்ட அந்த ஸஹாபியுடைய அந்த தவறை பற்றி பின்பற்று என்று நீ எப்படி என்னை நிர்பந்திப்பாய்? சஹாபாக்களை ஏற்றுக் கொள்வேன் என்று சொன்னால் அந்த தவறுலே அவரை நீ நான் பின்பற்ற வேண்டும் என்று என்னை வலியுறுத்த என்னை நிர்பந்தப்படுத்த உனக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?

அப்பொழுதுதான் சஹாபாக்களை பின்பற்றியவர்களாக ஆகுவோமா? அப்படி யாருமே உலகத்துல எதையுமே செய்வதில்லையே. தன்னுடைய தலைவரை ஒருவர் பின்பற்றுகின்றார். புரிகிறதா? அப்படி பின்பற்றும் பொழுது, உதாரணத்திற்கு அந்த தலைவர் போனாரு ரோட்டில் தடுக்கி விழுந்து விடுகின்றார். இப்பொழுது என்ன செய்வீர்கள் நீங்கள்? தடுக்கி விழுந்து விட்டார்.

அவரே தெரியாமல் தடுக்கி விழுந்து விட்டேன் என்கின்றார். அல்லது மத்தவங்க சொல்லிட்டாங்க அப்பா அவர் தடுக்கி விழுந்தது அங்கே எதுவும் புதையல் அள்ளுவதற்கு இல்லை அப்பா. பாதியிலே இடறி தடுக்கி விழுந்துட்டாருப்பா என்கிறார். இல்லை இல்லை. நான் தடுக்கி தான் விடுவேன் என்றால்,

அல்லது நீ அவரை பின்பற்றுவதால் நீயும் அங்கே போய் விழுந்தால் தான் நீ அவரை பின்பற்றுவதாக நான் ஏற்றுக் கொள்வேன் என்று சொன்னால், இது பிடிவாதம். இது முரட்டுவாதம்.

இது அறிவு வாதம் இல்லை. இது நமக்கு வாயை அடைப்பதற்காக வேண்டி நம்ம மேல சொல்ல கூடிய ஒரு பழி இது. இது புத்திசாலிகள் பேசக்கூடிய பேச்சு அல்ல. இந்த மாதிரி நிறைய விஷயங்கள் இருக்கிறது. நாம் சொல்லும் பொழுது உடனே தூக்கிக் கொண்டு வருவான். அது அவர் இப்படி செய்யவில்லையே? அப்பா! அவர் செஞ்சது தான் தப்புன்னு சொல்லியாச்சே நாங்களே. அதை ஏன் நாங்கள் பின்பற்ற போகிறோம். அடுத்து பாருங்கள்.

இங்கே இன்னொரு விஷயத்தையும் சொல்லி விடுகின்றேன். சஹாபாக்கள் குர்ஆனுடைய வார்த்தைகள் உடைய ஒவ்வொரு வார்த்தையினுடைய விளக்கத்தை தெரிந்து கொள்வதிலும், அதை சரியாக புரிந்து கொள்வதிலும், எந்த அளவுக்கு ஆர்வம் உள்ளவர்களாக, முனைப்பு உள்ளவர்களாக இருந்தார்கள். இவர்கள் சொல்லுகின்ற மாதிரி எல்லாம் கிடையாது. இங்கே பாருங்கள். இந்த குர்ஆன் இருக்கிறதே! பூர்வீக அரபி மொழியில் இறக்கப்பட்டது. எந்த மொழியில்? பூர்வீக அரபி மொழியில். பண்டைய கால அரபி மொழி.

உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொல்கின்றார்கள். ஐயாமுல் ஜாஹிலியாவுடைய கவிதைகளை நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள். அந்த மொழியில் தான் குர்ஆன் இருக்கப்பட்டது என்கிறார்கள். அந்த கவிதைகளை படிக்காமல் குர்ஆனுக்கு நீங்கள் அர்த்தம் புரிய முடியாது. சரியான அர்த்தத்தை கொண்டு வர முடியாது.

இன்றைக்கு 100 தர்ஜமா வந்த உடனே பல மொழிகளிலே, ஒரு ரூமை போட்டு உட்கார்ந்து கொண்டு பல தர்ஜமாக்களை முன்னாடி வைத்துக் கொண்டு, நீங்கள் ஒரு தர்ஜமாவை எழுதிவிட்டு, இந்த தர்ஜமா. இந்த ஆயத்தில் இருந்து இந்த தர்ஜுமா. இந்த தர்ஜுமாவில் இருந்து இந்த தர்ஜமா எடுத்துக் கொள்வோம்.

இவர் எழுதின தர்ஜமாவிலிருந்து இந்த தர்ஜ்மாவை எடுத்துக் கொள்வோம் என்று சொல்லி, இப்படி தர்ஜமாவை உண்டாக்குவது பெரிய விஷயமா? கேட்கின்ற கேள்வி புரிகிறதா உங்களுக்கு? ஒருவர் அரபி மொழியை வைத்து வேற எந்த ட்ரான்ஸ்லேஷன் இல்லாம குர்ஆனுக்கு தர்ஜமா செய்வதாக இருந்தால் குறைந்தது ஒரு பத்து தப்ஸீரை முன்னாடி வைத்து அரபி மொழியை படித்திருந்தால் தான் தர்ஜுமா செய்ய முடியும்.

அப்படி செய்த பத்து பேரோட தர்ஜமாவை நீங்க வைத்துக் கொண்டு நீங்கள் பேச வந்துட்டீங்க. ஏன்னா இதையும் அவர்களோடு இருந்தவர்கள் செஞ்சதை, கேட்டதை நான் சொல்கின்றேன் உங்களிடம். அவர்கள் மகாபலிபுரத்தில் ரூம் போட்டு தர்ஜமா செய்த கதை என்னவென்று சொன்னால்,

எங்கள் பாட்டன் செய்த தர்ஜுமா, jacktast tarjuma, அவர் nijamudeen manbaee imported tarjuma எல்லா தர்ஜுமாவையும் வைத்துக் கொண்டு, இதை படியுங்கள். இது கொஞ்சம் லேசா இருக்கு. இது கொஞ்சம் ஒகே. இது இங்க கொண்டு வந்துருங்க. இது என்ன தர்ஜமா இது? திருட்டு வேலை இது. என்ன வேலை இது? திருட்டு வேலை இது. தர்ஜுமாவா இது? அவரோடு இருந்தவர்கள் சொன்ன சாட்சியாக்கள்.

# ஸலஃபுகள் என்றால் யார் அமர்வு 2

அமித் பகரிலேந்து, கூட எழுத்துப் பணியில் இருந்து, டைப்பிங் பணியில் இருந்து, இருந்தவர்கள் சொன்ன சாட்சியம் இது. சரி விஷயத்திற்கு வாருங்கள். ஸூரா நஹ்லா 16வது அத்தியாயம். இங்க பாருங்கள். அல்லாஹ் சுபஹானஹு தஆலா கேள்விக்கு மேலே ஒரு கேள்வியை கேட்கின்றான். அந்த அத்தியாயத்தில் தொடர்ந்து கேட்டுக் கொண்டே வருகின்றான்.

أَوْ يَأْخُذَهُمْ عَلَى تَخَوُّفٍ

எங்கிருந்த கேள்வியை கேட்கின்றான்? 45,46 அதுல ஒரு கேள்வி அல்லாஹ் என்ன கேட்கின்றான்? கவனியுங்கள். இப்போ. Takavufe. என்பது அரபியினுடைய என்பதிலிருந்து வந்தது. என்பது குர்ஆனில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. என்ன அர்த்தம்? பயப்படாதீர்கள் என்பது அர்த்தம். அப்பொழுது. ரொம்ப கஷ்டப்பட்டு பயம் தான் என்று அர்த்தம்.

இது நேரடியாக அர்த்தம் வைப்பதாக இருந்தால். உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் என்ன செய்கின்றார்கள்? அப்படி அர்த்தம் வைத்து பார்த்தால், அர்த்தம் அங்கே செட்டாகவில்லை. அர்த்தம் அங்கே அந்த ஆயத்துடைய அர்த்தம் செய்து பார்க்கும் பொழுது அர்த்தம் செட் ஆகவில்லை.

அரபி மொழி தெரிந்த அரபிக் கவிதைகளை அறிந்த பழைய சஹாபாக்கள் எல்லாரையும் கூப்பிடுகிறார்கள். கூப்பிட்டு விட்டு, அப்பொழுது கேட்கின்றார்கள்? இந்த என்ன அர்த்தம் என்று கேட்கின்றார்கள்? புரிகிறதா அப்பொழுது சஹாபாக்களில் சில பேர் யோசிக்கின்றார்கள்.

அமைதியாக இருக்கின்றார்கள். அப்பொழுது ஒரு சஹாபி எழுந்து உமரே! இந்த இடத்தில் என்பது பயத்தை அல்லாஹ் சொல்லவில்லை. அதாவது தாமதித்தல், கொஞ்சம் விட்டு கொடுத்தால், என்ற அர்த்தத்தில் அல்லாஹு தஆலா சொல்லுகின்றான் என்று சொல்கின்றார்.

அப்பொழுது அவர் சொல்கின்ற அர்த்தத்தின்படி இங்கே வைத்துப் பார்த்தால் அர்த்தம் கரெக்டாக வருகிறது. உடனே உமர் ரலியல்லாஹு அன்ஹு பேசாமல் இருந்து விட்டாரா? இதற்கு நீ எனக்கு ஆதாரத்தை கொடு. என்ற இந்த வார்த்தை. பயம் ஏற்ற மூல அர்த்தத்தில் உள்ள மூலச் சொல்லில் இருந்து வரக்கூடிய இந்த வார்த்தை.

கொஞ்சம் விட்டு பிடித்தல் கொஞ்சம் அவகாசம் கொடுத்தல், கொஞ்சம் தண்டனையை தாமதப்படுத்துதல், அப்படி என்கின்ற அர்த்தத்தில் இதை பயன்படுத்தப்படுவதற்கு எனக்கு ஒரு கவிதையை ஆதாரமாக கொண்டு வாருங்கள் என்கின்றார். அதுதான் டிக்ஷனரி அந்த காலத்திலே. இப்பொழுது நீங்க என்ன செய்கின்றீர்கள்? தமிழில் ஒரு வார்த்தைக்கு அர்த்தம் தெரிய வேண்டும் என்றால், டிக்ஷனரி லே தேடுவீர்கள் அல்லவா?

இந்த dictionary எப்படி உருவாக்கப்பட்டது தெரியுமா? எல்லா மொழியிலும். மொழி பாதுகாக்கப்பட்டது இப்படித்தான். எப்படி என்றால், அந்தக் காலத்துடைய கவிஞர்கள் மூலமாக. இந்த dictionary எழுதினவங்க எல்லாருமே, எதை மூலமாக வைத்து எழுதுவார்கள்? ஒரு வார்த்தைக்கு, ஒரு கவிஞர், இந்த அர்த்தத்தை,

இந்த வார்த்தையை தன்னுடைய கவிஇலே எந்த அர்த்தத்திற்கு பயன்படுத்து இருக்கின்றாரோ, அதை வைத்துத்தான் இன்றைக்கு நீங்கள் தமிழ் dictionary திறந்து பார்த்தீர்கள் என்றால், ஒரே வார்த்தைக்கு பல அர்த்தங்கள் கொடுத்திருப்பார்கள். ஒரு வார்த்தைக்கு, ஏன் அப்படி என்றால், அத்தனை அர்த்தத்தில் பண்டைக்கால கவிஞர்கள் பயன்படுத்தி இருக்கின்றார்கள்.

அப்படி சொன்ன உடனே, உடனே தாமதிக்காமல் அந்த சஹாபி அய்யாமுல் ஜாஹிலியாவுடைய தன் மனப்பாடம் செய்து வைத்திருந்த கவிதையை எடுத்துச் சொல்கின்றார். அதற்கு பிறகு தான் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் திருப்தி அடைந்தார்கள்.

இப்படித்தான் ஒவ்வொரு வசனத்துடைய அர்த்தமும் தெரிந்தவர்களிடமிருந்து தெரியாதவர்களுக்கு சேர்ப்பிக்கப்பட்டது. இப்பொழுது புரிந்து கொள்ளுங்கள். சஹாபாக்கள் குர்ஆனை அதிகம் விளங்கியவர்களா? அல்லது அரபு மொழியை இதையும் அடுத்ததை நான் சொல்லுகின்றேன். நான் ஏற்கனவே சொன்ன மாதிரி, நீங்களும் நானும் அரபி மொழியில் திறமையாவதாக இருந்தால் நமக்கு எத்தனை வருடம் தேவை. இத்தனை வருடம் தேவை. அதுல கூட மனப்பாடம் சக்தி வேற கரெக்டா இருக்க வேண்டும். படித்துவிட்டு வந்து இரண்டு வருடம், வேற தொழிலை பார்த்தால் அரபி மறந்து விடுகின்றோம். அரபி எழுத தெரிஞ்சா பேச தெரியவில்லை, பேசத் தெரிந்தால் எழுத தெரியவில்லை, படிக்க தெரிந்தால், புரிய தெரியல. புரிய தெரிந்தால், படிக்கத் தெரியவில்லை. அந்த நிலைமையில் நாம் இருக்கின்றோம்.

அல்லாஹு தஆலா அந்த மக்களுக்கு அரபி மொழியை அவர்களுடைய இயற்கையோடு சேர்த்து விட்டான். யாருக்கு? நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுடைய காலத்தில் இருந்த அரபிகள் இருக்கின்றார்கள் அல்லவா? அவர்களுக்கு மதரசா கிடையாது. சரியா? ஆனால் தாய் வழியாகவே தூய்மையான அரபி பண்டைய மொழியை அறிந்தவர்களாகவும் அதில் புலமை பெற்றவர்களாகவும் இருந்தார்கள்.

அவர்கள் காலத்தில் மொழி கலப்படம் இல்லாமல் இருந்தது. அரபி மொழி பரிசுத்தமாக இருந்தது. பேசியவர்களும் பரிசுத்தமாக பேசினார்கள். மொழியை உடைக்காமல். Kalowkiyala இல்லாம. கிளாசிகலா, கரெக்டா அப்படியே பேசினார்கள். எந்த கிராமர் மிஸ்டேக் இல்லாமல். அதனால அவர்கள் தாய் வழியாகவே அரபு இலக்கியங்களையும் இலக்கணங்களையும் அதனுடைய வழிகளையும் தெரிந்து கொண்டவர்களாக இருந்தார்கள்.

ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா பத்து வயதிலேயே 9 வயதிலேயே இலக்கண இலக்கிய கவிதைகளை கவி பாடக்கூடியவர்களாக இருந்தார்கள் என்றால், பாருங்கள். 10 வயதிலேயே. புரிகிறதா? அரபி பிள்ளைகள். விளையாடுகின்ற பிள்ளைகள் இருக்கின்றார்கள் அல்லவா? நீங்கள் படித்திருப்பீர்கள்.

دَخَلَ عَلَيَّ النَّبِيُّ صَلَّى اللهُ عليه وسَلَّمَ غَداةَ بُنِيَ عَلَيَّ، فَجَلَسَ علَى فِراشِي كَمَجْلِسِكَ مِنِّي، وجُوَيْرِياتٌ يَضْرِبْنَ بالدُّفِّ، يَنْدُبْنَ مَن قُتِلَ مِن آبائِهِنَّ يَومَ بَدْرٍ، حتَّى قالَتْ جارِيَةٌ: وفينا نَبِيٌّ يَعْلَمُ ما في غَدٍ. فقالَ النَّبِيُّ صَلَّى اللهُ عليه وسَلَّمَ: لا تَقُولِي هَكَذا، وقُولِي ما كُنْتِ تَقُولِينَ.

சிந்தனையோடு படிக்கணும். புகாரியில் படிப்பீர்கள். அன்சாரி பெண்கள் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உடைய வீட்டிற்கு வந்தார்கள். திருமண நேரத்திலே, tabs அடித்துக் கொண்டு அவர்கள் கவிதை பாடினார்கள். இருக்கிறதா? இல்லையா? யார் அவர்கள் அம்மாவா சொல்லிக் கொடுத்தார்கள் கவிதையை? அந்த கவிதையை அவர்கள் அத்தாவா சொல்லிக் கொடுத்தாரு? அந்த பிள்ளைகள் அப்பொழுது அந்த நேரத்திலேயே கவிதையை பாடினார்கள்.

அறிவிப்பாளர் : ருபய்யிஃ பின்த் முஅவ்வத் இப்னு அஃப்ரா அன்ஹா ரழியல்லாஹு அன்ஹா, நூல் : புகாரி, எண் : 4001

நம்ம பையன் பாடுவானா தமிழ்லே? பாடுவான். எதைத்தான் பாடுவான்? சொல்ல வேண்டாம் அதைப்பற்றி. நம்ம பையன் என்றால் பொதுவான ஒரு சூழ்நிலையை சொல்கின்றேன். நம்ம பையன் தான் அதை பார்க்கவே மாட்டானே, ஏன் படப் போகின்றான்? நம்ம பையன் என்றால் நம்ம நாட்டில் உள்ள பொதுவான மக்களை பற்றி சொல்கின்றேன். இவனுக்கு தெரியுமா இவனுக்கு எது தெரியும்? ஒரு திருக்குறள் என்றாலும் கூட அதை படித்துக் கொடுத்து, அதற்குப் பத்து தடவை ஆசிரியர் அர்த்தம் சொன்னால் தான் ஓஹோ இது தமிழா? என்பான். எப்படி? என்னங்க சரியா இல்லையா? நான் சொல்வது. பண்டைய கால கவி எடுத்து நமக்கு சொன்னால் ஏதாவது புரியுமா? அதற்கு விளக்க உரைப் பொருளுரை படிக்காமல், இது அங்க சேர்த்து அதை இங்கே சேர்த்து இவ்வளவு பெரிய வார்த்தையை ஒரு இரண்டு இடத்திலே சொல்லி ஒண்ணுமே விளங்க மாட்டேங்குது.

நானும் நிறைய எடுத்து படித்து தான் பார்க்கின்றேன் தானா புரியுமா என்று. அந்த விளக்கத்தை ஓ இது அப்படியா? ஓ இது இப்படியா? அதற்கு பிறகு தான் புரிய வருகிறது. அப்பொழுது இந்த மாதிரி ஒரு நிலையிலேயே மொழி மாறுவதற்கு முன்பு, அந்த மாறாத அரபி மொழியை அவர்கள் இயற்கையாகவே தாய் மொழியாகவே கற்றவர்கள். அதனா லே அவர்கள் குர்ஆனை புரிந்தது இருக்கிறதே? அது சரியான புரிதல். அது சரியான புரிதல். ஆம்! ஸஹாபாக்கள் பிதத்து செய்யாதவர்கள்

இந்த அரபி மொழியை சரியாக புரியாமல் இருப்பதற்கு இரண்டு விதமான ஃபித்அத்களுக்கு காரணமாகும். ஒன்று அமல் ரீதியான பித்அத்களுக்கு காரணமாகவும் இன்னொன்று கொள்கை ரீதியான பிதாத்துகளுக்கு காரணமாகவும் இருக்கும்.

இந்த சூபி தரீக்கா இப்படி போனார்கள் அல்லவா? இதெல்லாம் அமல் ரீதியான பிதாத். இந்த முஃதஸில்லா, காரிஜிய்யா இந்த தவ்ஹீத் ஜமாத் இது எல்லாம் சிந்தனை ரீதியாக பித்அது. நாம வந்து மௌலூத் ஓதுவது பிதாத் இல்லையா? ஆமாம் பிதாத்து.

பிஜே செய்வது பித்அத் இல்லையா? பித்அத்திலே அது ஒரு பெரிய பிதாத். தர்காவுக்கு போகிறவன் மவ்லூது ஓதுபவன் அமல் ரீதியான பிதாத்து செய்கின்றான். நீங்கள் செய்தது எதை செய்கின்றீர்கள்? தர்க்க ரீதியான, தத்துவ ரீதியான, சிந்தனை ரீதியான பித்அத்.

ரசூலுல்லாஹ் உடைய காலத்திலே இல்லாததை சொல்வதும் பித்அதா இல்லையா? இல்லாததை செய்றது பிதாத்து மாதிரி, என்ன சொல்ல மாட்டேன் என்கிறீர்கள்? நான் சொல்வது ஏதாவது தப்பாக இருந்தால் எதிர்த்து தாரளமாக கேளுங்கள். நாங்கள் டிஸ்கஸ் செய்யலாம்.

# ஸலஃபுகள் என்றால் யார் அமர்வு 2

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமுடைய காலத்துல இல்லாத ஒரு அமலை செய்றாரு இவர் மவ்லூத் ஓதுகின்றார். ரசூல் அல்லாஹ் காலத்தில் இல்லை. இவர் கருத்தை ஓதுகிறார். ரசூலுல்லாஹ் காலத்தில இல்ல. பித்அத். நான் என்ன கேட்கின்றேன்? ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய காலத்துல சஹாபாக்கள் நம்பி இருந்தார்கள் சொர்க்கம் படைக்கப்பட்டது என்று. சொர்க்கம் படைக்கப்பட்டிருக்கிறது.

وقالَ رسولُ اللَّهِ رأيتُ في مقامي هذا كلَّ شيءٍ وُعِدتُم لقد رأيتُموني أردتُ أن آخذَ قِطفًا منَ الجنَّةِ حينَ رأيتُموني جعلتُ أتقدَّمُ ولقد رأيتُ جهنَّمَ يحطِمُ بعضُها بعضًا حينَ رأيتُموني تأخَّرتُ ورأيتُ فيها ابنَ لُحَيٍّ وهوَ الَّذي سيَّبَ السَّوائبَ

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் போனார்கள் பார்த்தார்கள். அடிக்கடி சொன்னார்கள். தொழ வைக்கும் பொழுது எனக்கு சொர்க்கம் இதுவரை கொண்டு வந்து காண்பிக்கப்பட்டது. நான் அப்படியே ஒரு திராட்சை கொலையை பறிக்கலாம் என்று ஆசைப்பட்டேன் என்று இருக்கிறது.

அறிவிப்பாளர் : ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா, நூல் : நஸாயி, எண் : 1471

அண்ணன் சொல்கின்றார். சொர்க்கம், நரகம் படைக்கவில்லை என்று. அண்ணன் என்ன சொல்கின்றார்? சொர்க்கம், நரகம் இல்லவே இல்லை. இனிமேல் கியாமத்தில் தான் அல்லாஹ் உண்டாக்குவான் என்கின்றார்.

இது பிதாத் இல்லையா? வார்த்தைக்கு வார்த்தை குர்ஆனில் அல்லாஹ் சொல்லுகின்றான். நல்லவர்களுக்காக தயார் செய்யப்பட்ட சொர்க்கம் என்று. Mueddat. நல்லவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட சொர்க்கம் என்று. வார்த்தைக்கு வார்த்தை ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொல்கின்றார்கள்.

அல்லாஹ் சொல்லுகின்றான். நல்லவர்களுக்காக தயார் செய்து வைக்கப்பட்ட சொர்க்கம் என்று. அண்ணன் சொல்கின்றார். சொர்க்கம், நரகம் எல்லாம் ஒன்றுமே இல்லை இனிமேல்தான் எல்லாமே வரும் என்கின்றார்.

இது பித்அத் இல்லையா? அல்லாஹ் சொல்லுகின்றான். நான் வருவேன். என்கின்றான். குர்ஆனிலே. அல்லாஹு தஆலா தீர்ப்பளிப்பதற்காக மறுமையில் வருவான் என்கின்றான். ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொல்கின்றார்கள்,

يَنْزِلُ رَبُّنا تَبارَكَ وتَعالَى كُلَّ لَيْلَةٍ إلى السَّماءِ الدُّنْيا حِينَ يَبْقَى ثُلُثُ اللَّيْلِ الآخِرُ، يقولُ: مَن يَدْعُونِي، فأسْتَجِيبَ له؟ مَن يَسْأَلُنِي فأُعْطِيَهُ؟ مَن يَستَغْفِرُني فأغْفِرَ له؟

அல்லாஹு தஆலா முதல் வானத்திற்கு இரவினுடைய மூன்றாவது பகுதியில இறங்கி வருகின்றான் என்று. அப்போ சஹாபாக்கள் அல்லாஹ் அர்ஷிற்கு மேலே உயர்ந்திருப்பான் என்பதையும் நம்பினார்கள். மறுமையிலே தீர்ப்பளிப்பதற்காக அல்லாஹ் வருவான் என்பதையும் நம்பினார்கள்.

# ஸலஃபுகள் என்றால் யார் அமர்வு 2

அல்லாஹு தஆலா முதல் வனத்திற்கு இரவினுடைய மூன்றாவது பகுதியிலே இறங்கு வான் என்பதையும் நம்பினார்கள். நம்பினார்கள் இல்லையா? அல்லாஹ்வுக்கு தகுதியானதுபடி அது அது அதனுடைய இடத்திலே சரி என்ற போய் விட்டார்கள்.

அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு, நூல் : புகாரி, எண் : 1145

நீ என்ன எங்களுக்கு சொல்லி தருகின்றாய்? அல்லாஹ் அர்ஷிற்கு மேலே தான் இருக்கின்றான். அல்லாஹ் அர்ஷை விட்டு வரமாட்டான். அல்லாஹ் அர்ஷை விட்டு வரமாட்டான். அல்லாஹ் இறங்க மாட்டான். ரசூலுல்லாஹ்விற்கு அறிவியல் தெரியாத காரணத்தினால் சொல்லிவிட்டு போய் விட்டார்கள். உலகத்திலே எங்கேயாவது ஒரு பகுதியில் இறைவன் இருக்கிறது என்று ரசூலுல்லாஹ்விற்கு தெரியாமல் இருந்தது.

சஹாபாக்களுக்கு தெரியாமல் இருந்தது. சொன்னவுடன், பே! என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். நம்ம காலத்துல இது சொன்னா ரசூலுல்லாஹ்வை கேலி பண்ணிடுவாங்களோ, கிண்டல் பண்ணி விடுவார்களோ, மார்க்கத்திலே விளையாடி விடுவார்களோ, இதெல்லாம் விட்டு விடுங்கள். இதெல்லாம் ஹதீஸாக இருந்தாலும், இதெல்லாம் நாம் மறுத்து விட வேண்டும் இது ஹதீஸ் இல்லை என்று மறுத்து விட வேண்டும். இது பிதாத் இல்லையா?

செருப்பால அடிக்க வேண்டாமா இந்த உம்மத் அவனை. எவ்வளவு பெரிய பிதாத். புரிகிறதா உங்களுக்கு? எவ்வளவு ஆபத்தான வார்த்தை இது? 100 சஹாபாக்கள், எழுவதுக்கும் மேற்பட்ட சஹாபாக்கள் அறிவிக்கின்றார்கள் இந்த ஹதீஸை. எத்தனை சஹாபாக்கள்? 70க்கும் மேற்பட்ட சஹாபாக்கள் அறிவிக்கின்றார்கள்.

அல்லாஹ் arshலிருந்து இறங்குகின்றான் என்று. உனக்கு என்ன இடிக்குதுப்பா இதுல? ஆம் இரவிலே மூன்றில் ஒரு பகுதி உலகம் ஃபுல்லா எப்படியும் இருக்கத்தானே தானே செய்யும்? அல்லாஹ்வை கொண்டு வந்து படைப்பினங்களோடு ஏன் சம்மதப்படுத்துகின்றாய்? இரவு பகலும் என்பது யாருக்கு உள்ளது? படைப்புகளுக்கு உள்ளது. நமக்கு உட்பட்டது.

அல்லாஹ் arshஷில் உயர்ந்திருப்பதோடு, அவன் முதல் வானத்திற்கு இறங்குவதற்கும் சக்தி உள்ளவன். நீ என்ன செய்கின்றார்? நீ என்ன செய்ற? ஒருத்தன் மாடியிருந்தால், மாடியில் தானே இருப்பான். அவன் கீழே வந்து விட்டான் என்று சொன்னால், அவன் மாடியில் இருக்க மாட்டானே. நீ மனிதனோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றாய். இறங்குதல் என்பதை, ஒருத்தன் மாடியில் இருப்பான் அல்லது கீழே இருப்பான். கீழே வந்த பிறகு மாடில இல்ல. அப்பொழுது arsh இல்ல யார் உட்கார்ந்து இருக்கிறார்? என்னடா கேள்வி இது? புரிகிறதா உங்களுக்கு?

அப்புறமாக. அதாவது சரி. போயிட்டு போது. எப்படி? போய்விட்டு போகிறது. இந்த ஹதீஸை ஏற்றுக் கொள்வதாக இருந்தாலும் கூட, நாம் எப்படி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றால், அல்லாஹ் இறங்குகின்றான் என்று ஏற்றுக்கொள்ளவே கூடாது. அல்லாஹ்வுடைய ரஹ்மத் இறங்கி கேட்கிறது. அல்லாஹ்வுடைய விசேஷமான ரஹமத் இறங்குகிறதாம்.

எங்கே? இரவினுடைய மூன்றாவது பகுதியிலே. இப்பொழுது நாம் கேட்கின்றோம்? ஏன் பா! அந்த ஹதீஸ் உடைய அடுத்த வார்த்தையிலேயே அல்லாஹ் கேட்கின்றான்? பாவமன்னிப்பு தேடுபவர்

இருக்கின்றாரா? நான் மன்னிக்கின்றேன். தேவையை கேட்டவர் இருக்கின்றாரா? நான் அவரது தேவையை நிறைவேற்றுகின்றேன் என்று சொல்லிட்டு. ஹதீஸ் அதோட முடிந்து விட்டது. அது வேற விஷயம். ஹதீஸ் லே அல்லாஹ் இறங்குகின்றான் என்று சொல்லிவிட்டு அடுத்து என்ன வருகிறது? நம்மைப் பார்த்து அல்லாஹ் பேசுகிறான் என்று வருகிறது.

இப்பொழுது இதற்கு என்ன அர்த்தம் சொல்லுவீர்கள்? ஆம்! அடுத்த உடனே ஒரு மீட்டிங் போட்டு. அதாவது அல்லாஹ் ரொம்ப பிஸியாக இருக்கின்றான். இதெல்லாம் ஒரு வார்த்தை விடாமல் அவர் சொன்னதை உங்களுக்கு நான் அறிவிப்பு செய்து கொண்டிருக்கின்றேன்.

நீங்க வேண்டுமென்றால் அவர் பேசுகின்ற சீடி யை கேசட்டை எடுத்து போட்டு பார்த்துக் கேட்டு கொள்ளுங்கள். ஆம். அதாவது இது எப்படி விளங்க வேண்டும் என்றால், அடுத்ததற்கு. அதாவது அல்லாஹ் ரொம்ப பிசியாக இருக்கின்றான். நிறைய வேலை அல்லாவிற்கு. அதனால். நம்ம ரொம்ப பிசியா இருக்கும் பொழுது,

நமக்கு வேண்டியவர்களுடைய வேலையாக இருந்தால் அந்த வேலையை செய்வதற்கு நாம ஒரு ஸ்பெஷலா ஒரு நேரம் கொடுக்க மாட்டோமா? ஒரு அட்டெண்ஷன் கொடுக்க மாட்டோமா? அந்த மாதிரி, அந்த நேரத்துல அல்லாஹ் விசேஷமாக ஒரு அட்டென்ஷன் கொடுக்கின்றான் நமக்கு. நான் என்ன கேட்கின்றேன்? விட்டு விடுங்கள். நம்ம மற்ற விமர்சனத்திற்கு போக வேண்டாம்.

அல்லாஹ் இறங்குகின்றான் என்பதற்கு, அல்லாஹ் அட்டென்ஷன் கொடுக்கின்றான் என்ற இந்த விளக்கம் பித்அத்தா இல்லையா? அல்லாஹ்சொல்ற விளக்கமா? இல்லை. அல்லாஹ் இறக்கினான் என்பதற்கும், அட்டென்ஷன் கொடுக்கிறான் என்பதற்கும் இரண்டு வித்தியாசமான வார்த்தை அரபிலே இல்லையா? ரசூலுல்லாஹ்விற்கு அது சொல்லத் தெரியவில்லையா?

